(இ) நடைபெறவிருக்கின்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி மற்றும் பேரவை வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, முந்திய அரசு விதித்துள்ள தடையின் காரணமாக இதுகுறித்த செயற்குறிப்புக்கள் ஒத்திப்போடப் பட்டுள்ளன.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to tell us whether this decision was taken by Government after getting the consent of the Municipal Council of Madurai or without getting the consent of the Municipal Council of Madurai?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மதுரை நகராட்சி மன்றம் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. 27—1—70 தேதியில் கூட, தீர்மானத்தின் மூலம், அரசின் முடிவுகளை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவு கடன் வழங்கு சங்கம்.

* 26 வினா—திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கத்தில் நடைபெற்ற பைலா திருத்தம் பதிவாளரால் அனுமதிக்கப்பெற்றும் அதை அமல் நடத்தக்கூடாது என்று தமிழக அரசு தடை விதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, அரியலூரைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கம் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக செயல்படாமல் இருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? இனிமேலாவது அந்தச் சங்கம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கழகம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதைப்பற்றிய ஒரு வழக்கு ஹைகோர்ட்டில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை.

* 27 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை அமைப்பதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம், எனில், எப்போது நிறுவப்படும்?

1970 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அ & இ தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை பெடரேஷன் திருவாரூரில் தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றை 8—12—1968-ல் நிறுவியுள்ளது.

திரு. பெ. மலேச்சாமி: தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எடுக்கப்படுகின்ற எண்ணெய்யை எதெதற்குப் பயன்படுத்துகிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே; இந்த எண்ணெய் சாதாரணமாக சோப் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனல், அதை மேலும் சுத்தம் செய்வதால், சாப்பிடுவதற்குப் பயன்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: தலைவர் அவர்களே, தவிடு முக்கியமாக கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படுகிறது. தவிட்டிலிருந்து இந்த எண்ணெய் எடுத்துவிடுவதனுலே தவிட்டிலுள்ள சத்து குறைந்துவிடுகிறது என்று கூறப்படுகிறதே, அது உண்மையா? தவிடு கால்நடைகளுக்கு உணவாக இருப்பதாலே இந்த எண்ணெய் எடுப்பதை இந்த அரசாங்கம் கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகும்கூட, அதிலிருந்து கிடைக்கும் பிண்ணக்கு கால்நடைகளுக்கு உணவாகவே பயன்படுத்தப்படுகிறது.

Loan floated by Tamil Nadu Housing Board.

* 28. *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Religious Endowment be pleased to state:

(*a*) whether the Tamil Nadu Housing Board resolved to float a loan of the nominal value of Rs. 200 lakhs; and

(*b*) if so, how this loan would be utilised?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) ஆம்.

(இ) இந்தப்பணம் கீழ்க்கண்ட திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

(1) குறைந்த வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 800 வீடுகள் கட்டவும்,

(2) நடுத்தர வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 800 வீடுகள் கட்டவும்,

(3) 500 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி மேம்படுத்தவும் பயன்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, was this loan fully subscribed and was the work regarding the construction of cheap houses for the poor people taken up and if so, in which part of the City of Madras?